[1992 ஏப்ரல் 3

துறை அதிகாரிகளிடத்தில் கையகப்படுத்துவதற்கான கோரிக்கையை பொதுப்பணித் துறை இன்றைக்கு கொடுத்து ஆயத்த வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்குப் பின்னாலே நம்முடைய தலைமைப் பொறியாளர் (டிசைன் அண்ட் பிளானிங்) அவர்களின் அறிக்கை எல்லாம் வந்ததற்குப் பின்னாலே இதை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 467, திருமதி கே. மரியமுல் ஆசியா, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

467—

கல்வி நிறுவனங்களின் மீதான சொத்துவரி நீக்குதல்.

*2912 திருமதி கே. மரியமுல் ஆசியா:

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்வி நிறுவனங்கள் மீது சொத்துவரி விதித்ததன் காரணமாக கல்வி நிறுவனங்களுக்கு வரிச்சுமை ஏற்பட்டுள்ளதால் இதனை நீக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கட்டிடத்தைப் பயன்படுத்தும் ஒருவர் அல்லது பலர் அதற்காக வாடகை செலுத்த வேண்டியிருந்தால் அக் கட்டிடத்துக்கு வீட்டு வரியினின்றும் விலக்கு இல்லை. பள்ளிக் கட்டிடம் அப்பள்ளியின் நிர்வாகத்திற்கே சொந்தமாயின் வரி விதிப்பு இல்லை. ஆனால் பள்ளி வாடகைக் கட்டிடத்தில் செயல்படின் அக்கட்டிடத்தின் உரிமையாளர் இந்த விதியின் கீழ் வரிவிலக்கு கோர இயலாது.

திருமதி கே. மரியமுல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இந்தக் கல்வி நிறுவனங்களுக்கு சொத்து வரி விதித்து இருக்கிறார்கள். அதன் மூலம் கல்வி நிறுவனங்களை தொடர்ந்து நடத்த முடியாமல் சிரமப்படுகிறார்கள். மேலும் இந்த சொத்து வரி கட்டாத கல்வி நிறுவனங்களின் மீது ஜப்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இதை அரசு அறியுமா? அதைத் தடுக்க ஆவன செய்யுமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

1992 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக வீட்டு வரி தரை பரப்பு அல்லது வீட்டின் ஆண்டு வாடகை மதிப்பு அல்லது மூலதன மதிப்பின் அடிப்படையில் விதிக்கப்படுகிறது. கீழே குறிப்பிட்டுள்ள கட்டிடங்களுக்கு வீட்டு வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

1. பொது வழிபாட்டுக்கு மட்டும் பயன்படுத்தும் கட்டிடங்கள்.

2. மாணவ விடுதிகள் உள்ளிட்ட கல்வி சம்பந்தமான கட்டிடங்கள்.

3. பொது மக்கள் வரக்கூடிய நூலகக் கட்டிடங்கள்.

4. ஆதரவற்றவர்கள் அல்லது விலங்குகள் புகளிடமாகப் பயன்படுத்தும் மற்றும் அறச் செயல்களுக்காகப் பயன்படுத்தும் கட்டிடங்கள்.

5. நோயாளிகளுக்கு தனிப் படுக்கை தொகுதிகள் அல்லது படுக்கை உடைய மருத்துவமனைகள்.

மேலே குறிப்பிட்டிருக்கிற காரியங்களுக்காக ஒரு கட்டிடத்தைப் பயன்படுத்தும் ஒருவர் அல்லது பலர் அதற்காக வாடகை செலுத்த வேண்டியிருந்தால் அந்தக் கட்டிடங்களுக்கு வீட்டு வரியிலிருந்து விலக்கு இல்லை. பள்ளிக் கட்டிடம் அப்பள்ளியின் நிர்வாகத்திற்கு சொந்தமாயின் வரிவிதிப்பு இல்லை. பள்ளி வாடகைக் கட்டிடத்தில் செயல்படின் அந்தக் கட்டிடங்களின் உரிமையாளர் இந்த விதிகளின் கீழ் வரி விலக்கு கோர இயலாது. எனவே, எந்தப் பகுதியில் எந்தக் கல்வி நிறுவனத்திடமிருந்து வரி வசூல் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்தால் மேற்கொண்டு விசாரித்து தக்க விவரங்களை வழங்க இயலும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போல ஜப்தி செய்யப்படுகிற நிலைமைகள் இருந்தால் அதுபற்றி என்னிடம் தெரிவித்தால் மேற்கொண்டு நடவடிக்கை யெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-10.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் (திருமதி) பீட்ரிக்ஸ் டி'சோசா.

Dr. THIRUMATHI BEATRIX D'SOUZA : Hon, Speaker, is the Goverment aware that this property tax is being passed on to the students, as the only source of income for the schools is the fees collected ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பள்ளிகளுக்கு இருக்கிற ஒரே சோர்ஸ் பீஸ் கலெக்சனாக இருக்கிற காரணத்தால், இத்தகைய வரி விதிப்பு மாணவர்களைத் தானே பாதிக்கும் என்று கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மேலே சொன்ன மூன்று காரணங்களுக்காக வரி விலக்கு அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அடிப்படையிலே அந்தப் பள்ளியினுடைய கட்டிடங்கள், அந்தப் பள்ளி நிர்வாகத்திற்குச் சொந்தமாக இருப்பின், அதற்கு நிச்சயமாக வரி விலக்கு அளிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ச. ஆரோக்கிய சாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் வரி விலக்கு அளித்திருப்பதாகச் சொல் கிறார்கள். ஆனால், இந்தச் சிறுபான்மைச் கல்விநிறுவனங் களில் வரி வசூலிக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கண்ட 3 அடிப்படைக் காரணங்களுக்காக வரி விலக்கு அளிக்கப்படுகிறது. அப்படி வரி விலக்கு அளிக்கப்படுகிற கட்டிடங்களுக்கு வரி வசூலிப்பதாக இருந்தால், அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நட வடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக் கூடிய எல்லாப் பள்ளிகளுக் கும், அது சொந்தக் கட்டிடமாக இருந்தால்கூட, டிமாண்ட் நோட்டீஸ் முனிசிபாலிட்டி மூலமாக, திருப்பத்தூர் ராமகிருஷ்ணா ஹைஸ்கூல் போன்ற பல பள்ளிகளுக்கு இப்போது அனுப்பப்பட்டு இருக்கிறது. ஆகவே, இது போன்ற டிமாண்ட் நோட்டீஸ் களைக் கொடுத்து, நகராட்சிகளும், லோக்கல் அட்மினிஸ்ட் ரேசன் அதிகாரிகளும் இன்று கெடுபிடி செய்வதை அரசு நிறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற கட்டிடங்களைப் பற்றி என்னிடத்திலே எடுத்து வைத்தால், அதைப் பற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1992 ஏப்ரல் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 468 டாக்டர் (திருமதி) வெ. சரோஜா, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

468—

சங்ககிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் நீட்டித்தல்.

* 4841 டாக்டர் (திருமதி) வெ. சரோஜா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சேலம் மாவட்டம், நெடுங்குளம் இராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சங்ககிரி தொகுதி மல்லசமுத்திரம் வரை கொடுக்கப்பட்ட திட்டம் வையப்பமலை, சப்பையாபுரம் வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாரிய விதிமுறைகளின்படியும், தொழில் நுட்ப ரீதியாகவும் வையப்பமலை மற்றும் சப்பையாபுரம் கிராமங்களை இடப்பாடி இராசிபுரம் கூட்டுக்குடிநீர் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள இயலாது என்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய துணைத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

டாக்டர் (திருமதி) வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லசமுத்திரம் ஒன்றியம், வையப்பமலை பொது மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினைக்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வையப்பாளையம் கிராமத்தில் தற்போது மக்கள் தொகை 660. இதில் ஆதி திராவிடர் 100. அந்தப் பகுதி குடிநீர் வசதி பெற்ற கிராமம். அதிலே ஒரு திறந்தவெளி கிணறு மூலமாக நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 10 லிட்டர் தண்ணீர் கிடைக்கிறது. 1984-85-ல் நிறைவேற்றப்பட்ட கூட்டுக்குடிநீர்த் திட்டத்தில் நீர் ஆதாரம் குறைந்துவிட்டது. மாற்று நீர் ஆதாரம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் (திருமதி) வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழ்துளைக் கிணறுகள் மூலம் தற்காலிகமாக குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டாலும், கோடைக் காலங்களில் வையப்பமலை மற்றும் அதைச் சுற்றியுள்ள மக்களுடைய